# கல்வி அமைச்சு - தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞான கிளை

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2024
## மாதிரி வினாத்தாள்- விடைப்பத்திரம்

## புவியியல் I

### பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 11 | 5 | 21 | 3 | 31 | 3 |
| 02 | 1 | 12 | 2 | 22 | 5 | 32 | 5 |
| 03 | 5 | 13 | 4 | 23 | 1 | 33 | 1 |
| 04 | 2 | 14 | 1 | 24 | 4 | 34 | 2 |
| 05 | 4 | 15 | 3 | 25 | 2 | 35 | 4 |
| 06 | 2 | 16 | 4 | 26 | 5 | 36 | 3 |
| 07 | 1 | 17 | 5 | 27 | 2 | 37 | 4 |
| 08 | 5 | 18 | 1 | 28 | 3 | 38 | 1 |
| 09 | 4 | 19 | 2 | 29 | 1 | 39 | 5 |
| 10 | 3 | 20 | 3 | 30 | 4 | 40 | 2 |

### பகுதி -II

01.

i. சுவடு. **(1 புள்ளி)**

ii. கிராம சேவகர் பிரிவு **(1 புள்ளி)**

iii. காடு **(1 புள்ளி)**

iv. E **(1 புள்ளி)**

v. பாடசாலை, தபாலகம், வாடிவீடு, எரிபொருள் நிரப்பும் நிலையம் **(½ புள்ளி வீதம் 2 புள்ளிகள்)**

vi. வரைபடம் அச்சிடப்படும் போது அளவுகள் மாறுபடுவதனால்,கணக்கிட்டு புள்ளி வழங்கவும்.(2 **புள்ளிகள்)**

vii -படப்பகுதி முழுவதும் குடியிருப்புகள் பரம்பியுள்ளன.

-அடர்த்தியான/சந்தி/நேர்கோட்டு/கொத்தணி பலவகையான குடியிருப்பகள் படப்பிரதேசத்தில் காணப்படல்.


-வீதிகள் சந்திக்கின்ற இடங்களில் சந்திக்குடியிருப்புகள்..

-மலைபாங்கான பிரதேசங்களில் சிதறல் குடியிருப்புகள்.

-ஆங்காங்கே வீதிகளின் இருபுறமும் நேர்கோட்டு குடியிருப்புகள்.

-ஆங்காங்கே கொத்தணி குடியிருப்புகள்..(3 **பண்புகளை குறிப்பிட்டிருந்தால் 1 புள்ளி வீதம்- 3 புள்ளிகள்)**

viii. குறுக்குவெட்டு முகம் சரியாக வரைதல் .(4 **புள்ளிகள்)**



ix. **<u>உயர் மலை பிரதேசங்கள்</u>**

- இறப்பர் மற்றும் தேயிலை பயிர்ச்செய்கை
- காடுகளில் குறைவான பயிர்ச்செய்கை

**<u>சமவெளிகள்</u>**


- வீட்டுத்தோட்டங்கள்
- தென்னை பயிர்ச்செய்கை
- சில பகுதிகளில் இறப்பர் மற்றும் தேயிலை பயிர்ச்செய்கை

**நதிக்கரைகள்**

- நெற்பயிர்ச்செய்கை

**பௌதீக அம்சங்களுக்கும், பயிர்ச்செய்கைகளுக்கும் இடையிலான தொடர்புகளை இரு காரணிகளுடாக விளக்கியிருந்தால் 4 புள்ளிகள் + வரைபடம் 1 புள்ளி = 5 புள்ளிகள்**

2. **உலகப்படத்தினை பார்க்கவும்..**




## பகுதி -III

3. i.
- இணையம் - அறிக்கைகள்
- நூலகம் - செய்மதி படங்கள்
- படம் - வரைபுகள்
- விமான ஒளிப்படங்கள்- படங்கள் மற்றும் புகைபடங்கள்

**(3 மூலங்கள் பெயரிடப்பட்டிருப்பின் 1 புள்ளி வீதம்- 3 புள்ளிகள்)**

ii. **<u>கருப்பொருட்படங்களின் பயன்பாடுகள்</u>**

- ஒரு கருப்பொருளை மட்டும் விவரிப்பது இதன் விசேட பண்பாகும்.
- ஒரு பிரதேசத்தின் ஒரு கருப்பொருள் மீது முழுக்கவனம் செலுத்தக் கூடியதாக இருத்தல் (ஒரு நாட்டின் அல்லது உலகின் தகவல்கள்)
- ஒரு கருப்பொருளைக் கொண்ட படமாக இருப்பதால் பல படங்கள் மூலம் காலம்சார் மாற்றங்களை எடுத்துக் காட்டமுடியும்.
- ஒரு கருப்பொருள் படத்தினுள் வெவ்வேறு காலங்களில் ஏற்பட்ட வெவ்வேறு மாற்றங்களைக் காட்டமுடியும்.
- சிறிய அளவு கொண்ட படங்கள் பயன்பாட்டிற்கு இலகுவானதாகும்.

**<u>இடவிளக்கப்படங்களின் பயன்பாடுகள்</u>**

- பிரதேச தரைத்தோற்றத்தின் இடரீதியான பரம்பலை அறிய முடிதல்
- ஏதாவது ஓர் இடத்தின் தனியமைவு அல்லது சார்பமைவைச் சரியாக வெளியிடக்கூடியதாகவுள்ளமை.
- இடவிளக்கவியல் அம்சங்களுக்கிடையிலான தொடர்புகளை தெளிவாக விளங்கிக்கொள்ளக் கூடியதாகவிருத்தல்.

- நாட்டின் அல்லது பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் செயற்பாடுகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான அளவுத்திட்டம் பயன்படுத்த முடிதல்.
**(இரு இடவிளக்கப்படங்களின் பயன்பாடுகள் 2 + இரு கருப்பொருள் படங்களின் பயன்பாடுகள்- 2+2=4 புள்ளிகள்)**

iii. **தரவு வரிசை** - எளிமையான முறைமை
- இலகுவாக தரவுகளை ஒழுங்குபடுத்த முடிதல்.
- விரைவாக (குறுகிய காலம்) தரவுகளை ஒழுங்குபடுத்த முடிதல்.
- பகுப்பாய்வின் போது இலகுவானது.

**தரவு அட்டவணை** -தரவு விவரணத்திற்கு இலகுவானது.
-தரவுகளை இனங்காண்பதற்கு எளிதானது.
-தரவு பகுப்பாய்விற்கு தேவையான பின்னணியை தருகிறது.
-பெரிய தரவு தொகுதிகளையும் பகுப்பாய்வு செய்ய முடிதல்.
**(இரு நுட்பமுறைகளை குறிப்பிட்டு, நன்மைகள் ஒவ்வொன்றை குறிப்பிடுதல் 4 புள்ளிகள்)**

iv **(a) வானிலை எதிர்வுகூறல்**

தரவு பகுப்பாய்வு- காலரீதியான தரவு பகுப்பாய்வுக்கும்,வானிலை எதிர்வுகூறலுக்கும் பயன்படுதல்.

-வெப்பநிலை,மழைவீழ்ச்சி,காற்றின் வேகம் போன்ற வானிலை மூல கூறுகளுக்கான எதிர்வுகூறல்களுக்கு புள்ளிவிபரவியல் நுட்பமுறைகள் பயன்படல்.

-புள்ளிவிபரவியல் நுட்பமுறைகளை காட்சிபடுத்துவதன் மூலம் சிக்கலான வானிலை தரவுகளை புரிந்துகொள்ளல்.

-வானிலை தரவுகளின் துல்லியம், நம்பக தன்மையை சரிபார்க்கவும் புள்ளிவிபரவியல் நுட்பமுறைகள் பயன்படுத்தப்படல்.

(b)**அபிவிருத்தி திட்டங்கள்**

- புள்ளிவிபரவியல் நுட்பமுறைகளை பயன்படுத்தி சனத்தொகை, பொருளாதாரம், சூழல் காரணிகள் போன்றவற்றுடன் தொடர்புடைய இடஞ்சார் தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் அபிவிருத்தி திட்டங்களுக்கான அபாயங்களை மதிப்பிடல்.
-அபிவிருத்தி திட்டங்களின் போது சூழல் தாக்க மதிப்பீடுகளை மேற்கொள்ள புள்ளிவிபரவியல் நுட்பமுறைகள் பயன்படுத்தப்படல்.
-புவியியல் தகவல் முறைமை மற்றும் புள்ளிவிபரவியல் நுட்பமுறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் இடஞ்சார் பகுப்பாய்வின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- வளப்பங்கீடுகளுக்கு பயன்படுத்தப்படல்.

**(இரு துறைகள் தெளிவு படுத்தப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வீதம் 4 புள்ளிகள்)**

04. i. ஒரு பொருள் அல்லது செயற்பாடு தொடர்பாக பௌதீக ரீதியான தொடுகையின்றி இனங்காணல், ஆய்வு செய்தல், விளங்கிக்கொள்ளல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் தொலையுணர்வு நுட்ப முறைமையாகும்.
**(சரியாக வரையறை செய்திருப்பின் 2 புள்ளிகள்)**

ii. தரை மேற்பரப்பு மேடை:வாகனம் ஒன்றிலுள்ள பாரந்தூக்கி,உயரமான கோபுரம்
வான்வழி மேடைகள்: வான்வெளி விமானம், ஹெலிகொப்டர், புகைப்பட கருவியுள்ள விமானம்,பலூான்
விண்வெளி மேடைகள்: செயமதிகள், ஏவுகணைகள், விணவெளி ஓடங்கள்
**(மேடையை பெயரிட ½ புள்ளி+உதாரணம் ½ புள்ளி வீதம் 3 புள்ளிகள்)**

iii. **A – இலக்கு (Target)**
**B – உணரிகள் (Sensor)**

**(பெயரிட ½ புள்ளி+விளக்கம் ½ புள்ளி வீதம் 4 புள்ளிகள்)**

*


iv. - தொற்று நோய் பரவும் பிரதேசங்களில் தகவல்கள் பெற்றுகொள்ளல்.
- அனர்த்த பிரதேசங்களில், அனர்த்ததிற்கு பின்னரான மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- அனர்த்த பிரதேசங்களை படமாக்கல்.
- மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல்.
- நிவாரணம் வழங்கல்.
- மீள்குடியேற்றங்களை மேற்கொள்ளும் போது

**(3 சந்தர்ப்பங்களை விளக்குயிருப்பின் 2 புள்ளி வீதம் 6 புள்ளிகள்)**

**5.** i.

| வகுப்பாயிடை (Kg ஆயிரம் ) | மீடிறன் | திரட்டு மீடிறன் | திரட்டு சதவீத மீடிறன் % |
|---|---|---|---|
| 0 - 1999 | 08 | 08 | 37.5 |
| 2000 - 3999 | 06 | 14 | 46.6 |
| 4000 - 5999 | 03 | 17 | 56.6 |
| 6000 - 7999 | 05 | 22 | 73.3 |

| | | | |
|---|---|---|---|
| 8000 - 9999 | 03 | 25 | 83.3 |
| 10000 - 11999 | 03 | 28 | 93.3 |
| 12000 - 13999 | 02 | 30 | 100 |





**திரட்டு மீடிறன் காணுதல்-1 புள்ளி**
**இரு அச்சுகளை வரைதல்- பெயரிடுதல்-1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்**
**தலைப்பு மற்றும் மூலம் ½ புள்ளி வீதம் 1 புள்ளி**
**ஒகிவ் வளையி சரியாக வரைதல் 4 புள்ளிகள் (மொத்தம்-8 புள்ளிகள)**

ii. ஒகிவ் வளையி ஐ அடிப்படையாக கொண்டு, **(இரு போக்குகளை விளக்கியிருப்பின் 2 புள்ளிகள் வீதம்-4 புள்ளிகள்)**

iii. **(3 பயன்கள் விளக்கியிருப்பின் 1 புள்ளி வீதம் 3 புள்ளிகள்)**

6. i.



**இரு அச்சுகளை வரைதல் பெயரிடுதல் -1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்**

**தலைப்பு மற்றும் மூலம் ½ புள்ளி வீதம் 1 புள்ளி**

**குறியீட்டு விளக்கம் 1 புள்ளி**

**கூட்டுபார் வரைபடத்தினை சரியாக வரைதல்( நிறம் அல்லது வேறு) 4 புள்ளிகள் (மொத்தம்-8 புள்ளிகள)**

ii. கால ரீதியான மாற்றங்களுக்கேற்ப விடையளித்தல் வேண்டும்.**(3 போக்குகளை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 3 புள்ளிகள்)**

iii. **(இரு ஒற்றுமைகளும்,இரு வேற்றுமைகளும் விளக்கியிருப்பின் 1 புள்ளி வீதம் 4 புள்ளிகள்)**

## புவியியல் II

01).

i. -தலையீட்டுத் தீப்பாறை
-தள்ளல் தீப்பாறை

**(இரு வகையும் சரியாக பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்)**

ii. **- தலையீட்டுத் தீப்பாறை**
- வில்லைத் தீப்பாறை
- குமிழ் தீப்பாறை
- கிடைத் தீப்பாறை
- குழிவுத் தீப்பாறை
- சீதர்மரத் தீப்பாறை
- பாதாளக் கற்குகை

**- தள்ளல் தீப்பாறை**
- எரிமலைக் கூம்பு
- சாம்பல் கூம்பு
- கூட்டெரிமலை
- எரிமலை வாய்
- லாவாக் கூம்பு
- எரிமலைக் கழுத்து

**(ஒவ்வொரு வகைக்கும் இரு நிலவுருவங்கள் வீதம் வரைந்து விளக்கியிருப்பின் 1 ½ வீதம்*4=6புள்ளிகள்)**

iii. A – படை கழற்றல்
B - தேய்த்தல்

**(இரு செயற்பாடுகளை குறிப்பிட்டிருப்பின் 1 குள்ளி வீதம்- 2 புள்ளிகள்)**

A **-வட்டக்குகை**

B **-செம்மறியுருபாறை**

**இரு நிலவுருவங்கள் பெயரிடுவதற்கு ½ புள்ளி வீதம்-1 புள்ளி+ விளக்கம் 2 புள்ளி வீதம் 4 புள்ளிகள்= 6 புள்ளிகள்)**

iv. **சுற்றுலா கைத்தொழில்** (நோர்வே, சுவீடன், பின்லாந்து)
- தொங்கு பள்ளத்தாக்குகளை அண்டிய நீர்வீழ்ச்சிகள்
- பனி மலையேற்றம்
- பனி சார் விளையாட்டுகள்

- **விவசாய நடவடிக்கைகள்**(நியூசிலாந்து, டென்மார்க்)
  - அறைபாறைகளி பகுதிகளில் விவசாயம்
  - புல்சமவெளிகளில் கால்நடை வளர்ப்பு
- **நீர் மின்சார உற்பத்தி** (நோர்வே)
  -தொங்கு பள்ளத்தாக்கு அண்டிய பகுதிகள்
- **படிவுதிட்டை கரை சார்ந்த பிரதேசங்கள்** (பிரித்தானியா,நோர்வே)
  - மீன்பிடி கைத்தொழில்
  - கப்பல் கட்டும் கைத்தொழில்

**(பனிக்கட்டியாற்று நிலவுருவங்களை பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் 3 முறைகளை விளக்கியிருப்பின் 2 புள்ளி வீதம்- 6 புள்ளிகள்)**

02). i. - நில வழுக்குகை (இழுத்துச் செல்லல்)
- சரிந்து விழல்
- வழுக்குதல்
- உருளுதல்
- சேறு வழிதல்

**(இவற்றுள் இரண்டினை பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்)**

ii.

| பௌதீக காரணிகள் | மானிட காரணிகள் |
|---|---|
| சாய்வின் தன்மை | கட்டடங்கள் மற்றும் வீதிகள் நிர்மாணித்தல் |
| மண்ணின் இயல்பு | அகழ்வுகளில் ஈடுபடுதல் |
| அதிகரித்த மழைவீழ்ச்சி | முறையற்ற நிலப்பயன்பாடு |
| மண் மற்றும தரைகீழ் நீர் | நீர்தேக்கங்களை அமைத்தல் |

**(இவற்றிற்கிடையேயான தொடர்புகள் விளக்கப்படல் வேண்டும்.தொடர்புகள் மூன்றினை விளக்கியிருப்பின்**

**2 புள்ளிகள் வீதம் - 6 புள்ளிகள)**

iii. - **முன்னாயத்தம் (preparedness)**

-நிலச்சரிவு ஏற்படுவதற்கு முன்னர் வானிலை அடிப்படையில் மற்றும் பௌதிக நிலத்தோற்ற மாற்றங்கள் ஏற்படுமெனில் அவற்றை இனங்காண்பதற்கான இயலுமை காணப்படல் வேண்டும்.
-இவ்வாறு இனங்காணல் அனர்த்தத்திற்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க உதவுகின்றது.
-ஆபத்து நிலையைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை இதனூடாக அமைக்க முடியும்.
-மக்களைத் தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல்.
-அத்தியாவசியப் பொருட்களின் பொதி ஒன்றினைத் தயாரித்து அவசர சந்தர்ப்பங்களின் போது பயன்படுத்த வைத்து கொள்ளல்.
-தொலைத்தொடர்பு ஊடகங்களைச் செவிமடுத்தல் அபாய சமிக்ஞைகளை செவிமடுத்தல்.

- **துலங்கல் (Response)**

-முன்னெச்சரிக்கை விடுத்தல் மற்றும் காப்பாற்றுதல்
-பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
-பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
-முடியுமாயின் அசையும் சொத்துக்களை அற்புறப்படுத்தல்.
-மக்களுக்கு தற்காலிக வீடுகள் மறறும் உணவு, குடிநீர் விநியோகித்தல்.
-இழப்புகளை மதிப்பிடுதல்.
-வலுவான இணைப்பாக்கம்

- **மீளெழல் (Recovery)**

-பாதிப்புற்ற மக்களின் உடல் மற்றும் உளச் சுகாதார நிலையினை வழமைக்கு கொண்டு வருவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
-பாதிப்புற்ற வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைத் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மீளமைக்க நடவடிக்கை எடுத்தல்.
-பாதிப்பை எதிர்நோக்கிய மக்களின் வாழ்க்கை நிலைமையினை முன்பிருந்த நிலையிலும் பார்க்க மேலான நிலைமைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல்

- **இழிவளவாக்கல் (Mitigation)**

**அனர்த்ததத்திற்கு முன்**

- அபாயத்தை அளவிடல்
- எச்சரிக்கை விடுக்கும் தொகுதிகளை நிர்மாணித்தல்.
- அபாயத்தைக் குறைக்கும் பொருட்களை அறிமுகப்படுத்தல்.
- முழுமையான முன்னாயத்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- மக்களுக்கு அறிவூட்டல் மற்றும் சமூகப் பங்கேற்பு
- நிறுவன ரீதியான வலுப்படுத்தலை ஏற்படுத்தல்.

**அனர்த்ததத்தின் போது**

- எச்சரிக்கை விடுத்தலும் காப்பாற்றுதலும்
- அவசரகால செயற்பாடுகள்
- வலுவான இணைப்பாக்கச் செயன்முறை

**அனர்த்ததத்தின் பின்னர்**

- அனர்த்தத்தின் பாதிப்புகளைக் கணக்கெடுத்து அவற்றுக்கு தீர்விளை முன்வைத்தல்.
-விழிப்பூட்டல்
-அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லல்.

**(அனர்த்த முகாமைத்துவ வட்டத்தின் மூன்று தொழிற்பாடுகளை விளக்கியிருப்பின் 2 புள்ளி வீதம் - 6 புள்ளிகள்)**

iv. -அனர்த்த பிரதேசங்களில் சிறிய அனர்த்த முகாமைத்துவ குழுக்களை அமைத்தல்.
-தற்போதைய அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை முறைமைபடுத்துதல்.
-தற்போது காணப்படுகின்ற அனர்த்த முன்னெச்சரிக்கை கருவிகளை பழுது பார்த்து பராமரித்தல்.
-அனர்த்த பிரதேசங்களை வரைபடங்களாக வெளியிடுதல்.
-அனர்த்த பிரதேசங்களை விட்டு வெளியேறாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**(இரு ஆலோசனைகளை விளக்கியிருப்பின் 3 புள்ளி வீதம்-6 புள்ளிகள்)**

03). i. குறிப்பிட்ட காலத்தின் குறித்த இடத்தின் வானிலை நிலைமைகளை மூலங்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுவது வானிலை மூலங்கள் எனப்படுகிறது

**(சரியான விடைக்கு 2 புள்ளிகள்)**

ii. -வெப்பநிலை அதிகரிக்கும் போது அமுக்கம் குறைவடைதல்.
-வெப்பநிலை அதிகரிப்பு/குறைவடைதலினால் காற்று வலயங்கள் உருவாக்கப்படுதல் (உயரமுக்கம்/ தாழமுக்கம் காற்று வலயங்கள்)
-வெப்பநிலை அதிகரிப்பினால் உருவாகக்கூடிய தாழமுக்க வலயங்களில் காற்றுக்கள் உருவாக்கப்பட்டு மழைவீழ்ச்சி பெறப்படும்.
-வெப்பநிலையை அடிப்படையாகக் கொண்டே வளியின் கட்புலனாகும் தன்மை தீர்மானிக்கப்படுகிறது.
வளி மண்டல ஈரப்பதன் மீது செல்வாக்குச் செலுத்தும் மிக முக்கிய காரணி வெப்பநிலையாகும்.குறித்த ஒரு வளிஅலகு கொண்டிருக்கக்கூடிய நீராவியின் அளவு, அவ்வளி அலகு கொண்டிருக்கும் வெப்பநிலை மீது தங்கியிருக்கும்
-முகில்களின் உருவாக்கம் மற்றும் வடிவம் என்பவற்றிற்கு வெப்பநிலை காரணமாகிறது

**(3 காலநிலை மூலகங்களின் செயற்பாடுகளில் வெப்பநிலை ஏற்படுத்தும் தாக்கம் 2 புள்ளி வீதம்- 6 புள்ளிகள்)**

iii. a. A - அரை வரை வலயம்

B - உயர்நில உலர் வலயம்

**(இரு வலயங்களும் பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம்- 2 புள்ளிகள்)**

b.**<u>பூகோள ரீதியான காரணிகள்</u>**

-அகலக்கோடுகளின் அமைவிடம்

-வட அகலக்கோடு 50 - 100 வரையிலும் மத்திய கோட்டுக்கு அண்மையிலும் அமைந்திருத்தல்

-இடை அயன ஒருங்கல் வலயத்தில் அமைந்திருத்தல்.

**<u>பிராந்திய ரீதியான காரணிகள்</u>**

-இந்து சமுத்திரத்திற்கு வடக்கே அமைந்திருப்பதால் நீராவி கலந்த காற்றின் செல்வாக்குக் காணப்படும்.

-இந்திய துணைக்கண்டத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதால் வெப்பத்துடன் கூடிய உலர்காற்றின் செல்வாக்குக் காணப்படும்.

-வங்காள விரிகுடாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதால் தாழமுக்க நிலைமைகள் தோற்றம் பெறுதல்

**(பூகோள ரீதியான ஒரு காரணி + பிராந்திய ரீதியான ஒரு காரணி 2 புள்ளி வீதம்- 4 புள்ளிகள்)**

iv. **<u>விவசாய துறை</u>**

-காலநிலை மாற்றம் விவசாயத்தின் மீது நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகின்றது.

-காலநிலை மாற்றத்தால் நோய்கள் மற்றும் பீடைகள் அதிகரிக்கின்றன.

-தாவரங்களில் இருந்து பெறும் பயன் குறைவடைவதுடன் காலம் தாழ்த்திய அறுவடைகளும் பெறப்படுகின்றன.

-வரட்சி நிலைமை மண்ணின் அமில தன்மை உயர்வடைந்து பயிர்ச்செய்கைக்கு உவப்பற்றதாக மாற்றும்

-விவசாய அறுவடை குறைவடையும.

-இயற்கையனர்த்தங்களினால் பயிர்நிலங்கள் அழிவடையும்

**<u>குடியிருப்புகள் அழிவடைதல்</u>**

-பூகோள வெப்பமடைதல் காரணமாக சமுத்திர நீர்மட்டம் அதிகரிப்பதனால் கரையோர வாழிடங்கள் பாதிக்கபடுதல்

-உலக சனத்தொகையில் ஏறத்தாழ 50% மானோர் கடற்கரையில் இருந்து 60 கி.மீ. தூரத்திற்குள் வாழ்கின்றனர்.

-உலக நகரங்களில் ஏறத்தாழ 3⁄4 அளவு கரையோரத்தில் அமைந்துள்ளன.

-வாழிடங்கள் அமைப்பதற்கான செலவுகள் அதிகரித்தல்.

-வலுச் சக்திப் பாவனையினால் வீடுகளினுள் வாழ்தல் இலகுவாக்கப்படுவதினால் வலுச்சக்தி பயன்பாடு அதிகரிக்கிறது.

**சுகாதாரம்**

-நோய்க்காவிகளால் பரப்பப்படும் நோய்கள் அதிகரித்தல். உதாரணம் : டெங்கு,மலேரியா, யானைக்கால் போன்ற நோய்கள்

-சூழல் வெப்பநிலை அதிகரிப்பதனால் சுவாசம் தொடர்பான நோய்களும் அதிகரிக்கும்.

-அதிக வெப்பம் மற்றும் குளிர் நிலைகள் காரணமாக ஏற்படும் வளி மாசடைவால் இருதய நோய்கள்.அல்லது தோல் புற்று நோய்கள் அதிகரித்தல்.

-காலநிலை மாற்றம் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தி உணவு மற்றும் போசணை மட்டம் குறைவடைதல்

**(3 துறைகளில் ஏற்படுத்தும் தாக்கத்தினை விளக்கியிருப்பின் 2 புள்ளி வீதம்-6 புள்ளிகள்)**

04). i. வட கொரியா,தென் கொரியா,ஜப்பான்,கிழக்கு சீனா

**(இவற்றுள் இரண்டினை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம்-2 புள்ளிகள்)**

ii. **<u>மத்தியதரை காட்டு உயிர்ப்பெருந்திணிவு</u>**

**பரம்பல்:**

-இவ் உயிர்ப்பெருந்திணிவு வகைகள் அனைத்துக் கண்டங்களினதும் கரையோரப் பகுதிகளில் காணலாம்.

-ஐரோப்பா மற்றும் வட ஆபிரிக்காவின் மத்திய தரைக்கடலைச் சூழ்ந்த பகுதிகளிலும், வடஅமெரிக்காவின் கலிபோர்ணியா,தென்னமெரிக்காவின் மேறகு் கரையோரப் பகுதிகள் (சிலி,தென்னாபிரிக்காவின் கேப்டவுண் சார்ந்த பகுதிகள் மற்றும் அவுஸ்திரேலியாவின் பேர்த் மற்றும் அட்லாண்டைச் சூழ்ந்த பகுதிகளில் இவ்வுயிர்ப்பெருந்திணிவு வகைகள் பரந்துள்ளன

**காலநிலை:**

-வரண்ட வெப்பக் காலநிலை நிலவும்.

-வெப்பக் காலத்தில் வெப்பநிலை 26.6 பாகை - 32.2 பாகை செல்சியஸாகவும் குளிர்காலத்தில் வெப்பநிலை 10 பாகை செல்சியஸ் அளவிலும் காணப்படும்.

-மழைவீழ்ச்சி குளிர்ப்பருவத்திலேயே கிடைக்கும்.

-ஆண்டின் நடுப்பகுதியில் மழைவீழ்ச்சி 762 மில்லி மீற்றர்களாக அமைவதுடன் மழைவீழ்ச்சி சீரானதன்மையைக் கொண்டதாகவும் காணப்படும்.

-குளிரான மாரியும், மழைவீழ்ச்சியற்ற கோடையும் விசேடமான இயல்புகளாகக் காணப்டுகின்றன.

**தாவரங்கள்**

-கோடை வரட்சியைத் தாங்கக்கூடிய வகையில் இசைவாக்கம் பெறறுள்ளன.

-தாவர இலைகள் முட்களுடன் கூடியவை. இலைகள் மெழுகு அல்லது புகை நிறத்தினால் மூடப்பட்டிருக்கும்.

-இலைகள் சூரிய ஒளிக்கு எதிர்த்தன்மையுடையதாகக் காணப்படும்.

-தடிப்பான தோலும், முடிச்சுகளுடன் கூடிய தண்டுப் பகுதிகளும் காணப்படும்.

-ஆழத்தில் பரம்பிய வேர்த்தொகுதிகளினூடாகத் தரைக்கீழ் நீரை உறுஞ்சும்.

-மேற்பரப்பு, புற்களால் மூடப்பட்டிருக்கும். அதன்மேல் மரங்களும் புதர்களும் வளர்ந்திருக்கும்.

**(மூன்று விசேட பண்புகளை விளக்கியிருப்பின் 2 புள்ளி வீதம்-6 புள்ளிகள்)**

iii. **<u>தாவர அடர்த்தி</u>**

-பாலைவனங்களில் அதிக வெப்பம் காரணமாக தாவர அடர்த்தி குறைவு.

-பாலைவன பசுஞ்சோலைகள் காணப்படும் இடங்களில் மாத்திரம் தாவரப்போர்வையை காணமுடியும்

-பாலைவன பிரதேசங்களில் குறைந்த மழைவீழ்ச்சி மற்றும் வளமற்ற மண் காரணமாக தாவரங்களின் அடர்த்தி குறைவாகும்.

-துந்திரா பிரதேசங்களில் அதிக குளிர் மற்றும் பனி படர்ந்து காணப்படுவதனால் தாவர அடர்த்தி குறைவாகும்.

**தாவர பல்வகைமை**

-பாலைவனங்களில் தாவரங்கள் குறைந்த வெபப் வீச்சுக்கு இசைவாக்கம் பெற்றிருப்பதனால் தாவரங்கள் பின்வரும் பண்புகளை கொண்டிருக்கும்.

-மெல்லிய இலைகளைக் கொண்டும், மெழுகுத் தன்மையுடன் கீழ் நோக்கிய இலைகளாகக் காணப்படும்.

-நீண்ட வேர்த்தொகுதி, மற்றும் முட்கள் நச்சுத்தன்மையைக் கொணடிருப்பதோடு, சதைப்பிடிப்பான தண்டு

-கொண்ட தாவரங்களாக காணப்படும்.

-துந்திரா பிரதேசங்களில் புற்கள் மாத்திரமே காணப்படும்.

**விலங்கு பல்வகைமை**

-பாலைவனச் சூழலுக்கு இசைவாக்கம் பெற்ற விலங்குகள் வாழ்கின்றன.

-நீரை சேமித்துக் கொள்வதற்கு ஏற்ற தன்மையுடைய விலங்குகள் வாழுகின்றன.

-துந்திரா பிரதேசங்களில் விலங்குகள் வாழ்வதற்கு உவப்பான சூழல் காணப்படுவதில்லை.

-கடுமையான குளிரான சூழலுக்குப் பழக்கப்பட்டுள்ள விலங்குகள் வாழ்கின்றன.

**உயிர்ப் பல்வகைமை**

-பாலைவனங்களில்,துந்திரா பிரதேசங்களில் ஏனைய பிரதேசங்களை காட்டிலும் உயிர் பல்லினத்தன்மை குறைவாகும்.

**வானிலையாலழிதல் மற்றும் மண் உருவாக்கம்**

-பாலைவனங்களிலும்,துந்திரா பிரதேசங்களிலும் வானிலையாலழிதல் செயற்பாடு மெதுவாக நடைபெறுவதனால் மண் உருவாக்கமும் மெதுவாக இடம்பெறும்.

**(இவ்வாறான மூன்று பண்புகளை ஒப்பிட்டு விளக்கியிருப்பின் 2 புள்ளி வீதம்-6 புள்ளிகள்)**

iv. -விவசாய நிலங்களின் விஸ்தீரணத்தால் குறிப்பாக புல் நிலங்கள் பாலைவானமாதலுக்குள்ளாகி வருகிறது.

-விவசாயத்தில் முறையற்ற நீர்பாசன நுட்பமுறைகளை பயன்படுத்தப்படல்.

-நவீன நுட்பங்களை பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

-முறையற்ற நிலப்பயன்பாடுகள்.

**(இவ்வாறான மூன்று வேறுபாடுகளை ஒப்பிட்டு விளக்கியிருப்பின் 2 புள்ளி வீதம்-6 புள்ளிகள்)**

05). i. **அகதிகள்:** இனம், சமயம், தேசியம், அரசியல், மற்றும் சூழல் இடர்கள் காரணமாக நாட்டினை விட்டுச் செல்லும் நபர்கள்

**இடம்பெயர்ந்தோர்:** அரசியல், வர்க்கம், சமயம், சூழலியல் இடர்கள் காரணமாக சொந்த பிரதேசத்தை இழந்த மக்கள்

**(தெளிவாக இரு பதங்களையும் விளக்கியிருப்பின் ஒரு புள்ளி வீதம்- 2 புள்ளிகள்)**

ii. **வடமேற்கு ஐரோப்பா** -அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலிருந்தான இடம்பெயர்வுகள்

**கிழக்காசியா** - பிறப்பு வீதம் அதிகரிப்பு.

- மருத்துவ துறையின் வளர்ச்சி காரணமாக இறப்பு வீதம் வீழ்ச்சியடைதல்.
- ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல்.

**(ஒரு பிரதேசத்திற்கு ஒரு காரணி விளக்கப்பட்டிருப்பின் 3 புள்ளி வீதம்-6 புள்ளிகள்)**

iii. - விவசாய குடியேற்றங்கள், மகாவலி குடியேற்றங்கள், உடவளவை நதிநீர் திட்டம், என்பவற்றின் காரணமாக ஈரவலயத்திலிருந்து உலர் வலயத்தில் மக்கள் குடியமர்த்தப்பட்டமை.

- யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீள குடியமர்த்துதல்.
- அனர்த்த பிரதேசங்களிலுள்ள மக்களை வேறு பிரதேசங்களில் குடியமர்த்துதல்.

**(மூன்று உதாரணங்கள் மூலம் விளக்கியிருப்பின் 2 புள்ளிகள் வீதம் 6 புள்ளிகள்)**

iv. -பல் கலாச்சார முறைமையை விரும்பாமை.

-உள்நாட்டின் பாதுகாப்பை உறுதிபடுத்துதல்.

-நகர்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் சிக்கல்.

-சட்டவிரோத குடிறேற்றங்கள்.

**(3 காரணிகளை விளக்கியிருப்பின் 2 புள்ளி வீதம்- 6 புள்ளிகள்)**

06).i. பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் செயற்பாடுகளில் எந்தவொரு நாடும் உலக நாடுகளுக்கிடையில் பல்வேறு வகையிலான தொடர்புகளை மேற்கொள்ளும் செயனமுறையாகும்.

**(மிகச்சரியாக விளக்கியிருப்பின் 2 புள்ளிகள்)**

ii. - தகவல் தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட துரித வளர்ச்சியானது பூகோளமயமாக்கல் செயற்பாட்டினை துரிதபடுத்திமை.

-பூகோளமயமாக்கல் செயற்பாடானது பலவேறு துறைகளின் கீழும் வளரச்சியடைந்தமை.

-பூகோளமயமாதல பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தமை.

**(மூன்று பண்புகளை விளக்கியிருப்பின் 2 புள்ளிகள் வீதம்- 6 புள்ளிகள்)**

iii. - இக் கம்பனிகளின் அலுவலகங்கள் அல்லது தொழிற்சாலைகள் பல்வேறு நாடுகளில் அமைக்கப்பட்டுள்ளமை

- அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் உற்பத்தி செலவு குறைவடைந்தமை.
- வெளிநாட்டு முதலீடுகளை விரிவாக்கிக் கொள்வதற்காக அந்நாடுகள் பொருளாதாரத்தை திறந்துள்ளமை.
- நெகிழ்வான வரிக்கொள்கை, நெகிழ்வான தொழிலாளர் சட்டதிட்டங்கள், முதலீட்டாளர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செயதல்.

**(மூன்று காரணிகளை விளக்கியிருப்பின் 2 புள்ளிகள் வீதம்- 6 புள்ளிகள்)**

iv. - **பாதகமான விளைவுகள்**

- தொழினுட்பம்/சமூக வலைதளங்கள் என்பவற்றினால் மாணவர்கள் கல்வி பாதிபபடைதல்.
- மூளைசாலிகள் தொழில் நிமித்தம் வெளியேறும் சந்தர்ப்பங்கள் அதிகரித்தல்.
- பொருத்தமற்ற கல்வி முறைகள் உள்வாங்கப்படுதல்.

- **<u>சாதகமான விளைவுகள்</u>**
  - உலகளாவிய ரீதியில் கல்வி வாய்ப்புகள் திறந்துவிடப்பட்டுள்ளமை
  - பூகோளமயமாதலால் நடைமுறையில் உயர்கல்விக்கான ஈடுபாடு அதிகரித்துள்ளமை
  - உலகளாவிய அறிவு மற்றும் தொழினுட்பம் பறிமாற்றபடுதல்.
  - தொலைகல்வி முறைமை பிரபல்யடைதல்.
  - புதிய கல்வி முறைமை உள்வாங்கப்படுதல்.

**(சாதக மற்றும் பாதக விளைவுகள் இரண்டினை விளக்கியிருப்பின் 3 புள்ளிகள் வீதம் 6 புள்ளிகள்)**

07).

i. -பாதுகாப்பு
- சமூகம்
-வலையமைப்பு
-மனிதன்
-இயற்கை சூழல்

**(இவற்றுள் நான்கினை பெயரிட்டிருப்பின் ½ புள்ளி வீதம் 2 புள்ளிகள்**

ii. a. கிராமிய குடியிருப்பு/ நகர குடியிருப்பு/ கிராம-நகர குடியிருப்பு

**(இவற்றுள் இரண்டினை பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்)**

**b. கிராமிய குடியிருப்பு**

-தனித்த வீடு அல்லது பண்ணை, சிறிய கிராமம் மற்றும் கிராமக் குடியிருப்பாக இனங்காண முடியும்.
-ஆரம்பப் பொருளாதார நடவடிக்கைகளை மையமாகக் கொணடு இக்குடியிருப்புகள் உருவாகின்றன.
-விவசாயம், மீன்பிடிக்கைத்தொழில், காலநடை வளர்ப்பு, வேடடையாடுதல் போன்ற ஆரம்ப பொருளாதார நடவடிக்கைகள் இடம்பெறும்.
-வீதி அமைப்பு முறையற்றது. வளர்ச்சியடையாதது.
-மேலை நாடுகளில் கிராமக் குடியிருப்புகளை மிகவும் இலகுவாக இனங்காண முடியும். அவற்றின் வீடுகளுக்கிடையில் இடைவெளி அதிகமாகும். சனத்தொகை எண்ணிக்கை குறைவாகும்.
-அநேகமாகக் கிராமியக் குடியிருப்புகளில் பயிர்ச் செய்கை நிலங்கள் மற்றும் கட்டடங்கள், நிரமாணிக்கப்பட்ட நிலங்கள் எனபவற்றை தெளிவாக இனங்காண முடியும்.
-கிராமியக் குடியிருப்புகளில் தற்காலிக மற்றும் நிரந்தரக் குடியிருப்புகளைக் காண முடியும்.
-விசேடமாகப் பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தற்காலிக, பகுதியளவு நிரந்தர குடியிருப்புகளும் கிராமியப் பகுதிகளில் உள்ளன.
-உணவு தேடிக் காலத்திற்கேற்பப் பெயர்ச்சி அடைதல், நடமாடும் மீன்பிடிக் கைத்தொழில், நெற் செய்கை, மண்ணின் தன்மை காலநிலை வேறுபாடுகள் ஆகிய சவால்களின் காரணமாகத் தற்காலிக மற்றும் பகுதியளவு தற்காலிக குடியிருப்புகள் உருவாகின

**நகர குடியிருப்பு**

-நகரம், பெருநகரம், நகரப் பகுதி, நகரச் சூழல், நகரப் பிரதேசம் போன்றவை நகரக் குடியிருப்புகளாகும்.
-குறிப்பிடப்பட்டளவு நிலப்பகுதியில் அதிகளவு சனத்தொகை வாழும் அதிக சனத்தொகையுடன் கூடிய கைத்தொழில் நிர்வாகம், வணிகம், கல்வி ஆகியநடவடிக்கைகள் கூட்டாக அமைந்த குடியிருப்பு நகரகுடியிருப்பு ஆகும்.
-நகரத்தின நிர்மாணிக்கப்படட் பகுதியினுள் இவ்வாறான பல்வேறு நடவடிக்கைகள் ஒன்றிணைந்துள்ளன.
-உலகின் நகர குடியிருப்பு விருத்தி வேகமாக இடம்பெறுவதைத் தற்காலத்தில் காண முடியும்.
-சேரிகள், குடிசைகள் குறைந்த வசதியுடைய வீடுகள் நகர குடியிருப்பின் இனனொரு பகுதியாகும்.
-அனேகமாக நகரத்திலுள்ள கைவிடப்பட்ட நிலம் அவர்களின் வாழிடமாகின்றது.
- உலகின் அனைத்து நாடுகளிலும் சேரிகள், குடிசைகள் மற்றும் குறைந்த வசதியுடைய வீடுகளை உடைய குடியிருப்புகளையும் அனுமதியற்ற குடியிருப்புகளையும் காண முடியும்.
-நகரத்தின் நிலைப்பிற்கு இவர்களால் கிடைக்கும் சேவையைப் போலவே நகரப்பிரச்சினைகள் பலவும் இவர்களால் உருவாக்கப்பட்டுள்ளன.
-நகரச் சூழல் மாசடைவு, நகர அலங்கரிப்புக்குத் தடையாக அமைதல், சட்ட விரோத நடவடிக்கைகள் இக்குடிசைக் குடியிருப்புகளினால் ஏற்படுகின்றன.

**கிராம-நகர குடியிருப்பு**

-கிராம மற்றும் நகரங்களுக்கு இடையில் அமைந்த இடைமாறு வலயமாக இனங்காண முடியும்.
-ஆரம்ப பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களும் நகரத்தில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களும் இவ்வலயத்தில் வாழ்கின்றனர்.
-கிராமத்தின் இயல்புகளைப் போலவே நகர இயல்புகளையும் காண முடியும். இங்கு படிப்படியாக நகர இயல்புகள் அதிகரித்துச் செல்லும்.
-அபிவிருத்தி அடைந்து வரும் பல நாடுகளில் கிராமத்திலிருந்து நகரத்திற்குத் தொழில் புரியவரும் பெயர்ச்சியாளர்களால் கிராம நகர குடியிருப்பு உருவாகிறது.
-அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நகரங்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் வாழ்ந்தாலும் நகரங்களின் நெரிசலில் இருந்து மீள கிராம நகர வலயத்தினை வாழும் பகுதியாகத் தெரிவு செய்கின்றனர்.

**(ஏதாவது ஒரு வகை குடியிருப்பின் பண்புகளை விளக்கியிருப்பின் 4 புள்ளிகள்)**

iii. a.- 1980-2015 வரையான காலப்பகுதியில் நகர சனத்தொகை 50% னால் அதிகரித்துள்ளது.
-2050 ஆண்டளவில் மொத்த சனத்தொகையில் 3/5 நகர சனத்தொகையாகும்.
-கிராம சனத்தொகை குறைவடைந்து செல்கிறது.
-2015 ஆம் ஆண்டாகும் போது மொத்த சனத்தொகையில் ½ அரைவாசிக்கும் அதிகமானோர் நகரில்

வசிக்கின்றனர்.

**(இரு போக்குகளை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம்- 2 புள்ளிகள்)**

b. - வலய ரீதியாக நகராக்க மட்டங்களில் பாரிய வேறுபாடுகள் நிலவுகின்றன.
-ஆசியா மற்றும் ஆபிரிக்க வலயங்களில் நகராக்கமானது உலகின் ஏனைய வலயங்களை விட விரைவாக இடம்பெறுகின்றது
-அபிவிருத்தி அடையும் நகரங்களில் நகராக்கத்துடன் முறையற்ற பிரிவுகள் வேகமாக விருத்தி அடைகின்றமை.
-மில்லியன் நகரங்கள் மற்றும் பெரு நகரங்கள் அதிகளவில் அபிவிருத்தி அடைந்து வருகின்றன.

**(இரு போக்குகளை விளக்கியிருப்பின் 2 புள்ளகள் வீதம்- 4 புள்ளிகள்)**

iv. -கொழும்பு நகரத்திலும் அதனைச் சூழ்ந்த நகராக்க வலயங்களிலும் குப்பை மற்றும் கழிவு முகாமைத்துவத்திற்காகப் பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
-நகர சுகாதாரம் மற்றும் சுகாதார வசதிகளை மேலும் விருத்தி செய்வதற்காக சுகாதார அமைச்சு, நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு சுகாதார வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றன.
-நகர சமூக விரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கும், நகரத்தில் குற்றங்களைக் குறைப்பதற்காகவும் பொலிஸ், இராணுவம் மற்றும் வேறு சிவில் அமைப்புக்கள் மூலம் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**(ஏதாவது மூன்று நடவடிக்கைகளை விளக்கியிருப்பின் 2 புள்ளிகள் வீதம்- 6 புள்ளிகள்)**

**08.**

i. - A - சுரங்கக்கைத்தொழில்
B - மேற்பரப்பு அகழ்வு
C - நிலக்கீழ் அகழ்வு
D - உற்பத்திக் கைத்தொழில்

**(சரியாக பெயரிட்டிருப்பின் ½ புள்ளி வீதம் 2 புள்ளிகள்)**

ii. - தொடர்பாடல்
- தொழினுட்பம்
- போக்குவரத்து
- அரச கொள்கை
- சந்தை வசதி

**(ஏதாவது மூன்று காரணிகளை விளக்கியிருப்பின் 2 புள்ளிகள் வீதம்6 புள்ளிகள்)**

iii - கரையோரப் பிரதேசங்களில் இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடிய இல்மனைட், ரூட்டைல்,சர்கோன், கானற், மொனசைற்று போன்ற கனிய மணல் ஊடாகப் பெருமளவு வெளிநாட்டு வருமானம் பெறப்படுகின்றது.
- கனிய வள ஏற்றுமதிகள் ஊடாக அநநியச் செலாவணி ஈட்டப்படுகிறது.
-கனிய வளங்களுடன் தொடர்புடைய வேலைவாய்ப்புகள்.
- பிரதேச அபிவிருத்திக்கு பங்களிப்பு.

**(ஏதாவது காரணிகளை விளக்கியிருப்பின் 2 புள்ளி வீதம் 6 புள்ளிகள்)**

iv. -மூடப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைகளை அரச ஆதரவுடன் மீண்டும் இயங்கச்செய்தல்.
-புதிய முயற்சியாளர்களை இனங்காணல்.
-புதிய உற்பத்தியாளர்களுக்கு சர்வதேச சந்தை வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல்.

**(ஏதாவது மூன்று ஆலோசனைகளை விளக்கியிருப்பின் 2 புள்ளி வீதம்-6 புள்ளிகள்)**

❊❊